திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு முதற்கண் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு தொகுதிக்குட்பட்ட ஆற்காடு நகரப் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு புறவழிச் சாலைக்கான நிலம் கையகப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.1 கோடியே 46 இலட்சம் ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து, அப்பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அந்தச் சாலையைப் புதுப்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு பகுதியில் புறவழிச் சாலை அமைப்பது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கருத்துரு கேட்டிருக்கிறார்கள். அங்கே புறவழிச் சாலை அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. அந்த நிலம் கையகப்படுத்தும் பணி முடிவுபெற்று, DPR தயாரிக்கும் பணிகளும் அங்கே நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நிறைவுபெற்ற பிறகு, புறவழிச் சாலை அமைக்கும் பணி தொடங்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 361, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

361—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***50700—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2015 செப்டம்பர் 28]

நெய்வேலி தொகுதி, காடாம்புலியூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, காடாம்புலியூரில் ஓர் அரசு கலைக் கல்லூரி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். காடாம்புலியூரில் புதிதாக கல்லூரி ஆரம்பிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கடல் சூழ்ந்த பாரதத்தின் மூன்றாம் பெரும் இயக்கமாகக் கழகத்தை உயர்த்திக் காட்டிய ஆற்றல்மிக்க அருந்தமிழ் அன்னையாம், (மேசையைத் தட்டும் ஒலி) அரிய பல திட்டங்களால், அன்னை தெரசா, அமெரிக்காவைச் சேர்ந்த கிளாரி, அமர்தியா சென் மற்றும் அர்னால்டு ஆகியோர் வியந்து போற்றிய நற்றமிழ் பூமிக்கு நாங்கள் பெற்று வந்த பெரும் வரமாம், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் தலைவணங்குகின்றேன்.

குற்றால அருவியில்கூட சீசனில் மட்டும்தான் தண்ணீர் கொட்டும். ஆனால், மாண்புமிகு எங்கள் அம்மா அவர்களின் திட்டங்களோ, வற்றாத அருவியாய் வாழ்நாள் முழுவதும் கொட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் தமிழ்நாட்டு மக்கள் வளமோடும், நலமோடும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். மாணவர்களின் எதிர்காலம் கருதி, கடுகுக்குள்ளே மலையைக் காணலாம் என்ற உயர்ந்த நோக்கில், மக்கள் நல ஆட்சியில், மடிக் கணினிகளை வழங்கி வருபவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, தானே புயல், மழை, வெள்ளம் மற்றும் வறட்சி ஆகியவற்றால் பாதிக்கப்படும் பகுதியாகும். அதேபோன்று,

என்.எல்.சி.-யின்மூலம் வீடு, நிலம் இழந்தோர் அதிகமாக உள்ளனர். மேலும் என்.எல்.சி.-யின்மூலம் அந்தப் பகுதியின் நிலத்தடி நீர் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகின்றது. மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிடர், தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் அதிகம் வசிக்கும் கிராமங்களை உள்ளடக்கிய பின்தங்கிய பகுதியாகும்.

விக்கிரவாண்டி—கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில் காடாம்புலியூர் கிராமம் உள்ளது. கல்லூரி அமைப்பதற்குப் போதிய நிலம் சுமார் 10 ஏக்கர் உள்ளது. பசி, பிணி போக்கிய வள்ளலார் பிறந்த மண்ணில், அடித்தட்டு மக்களுக்காக அன்றாடம் பசியாற அம்மா உணவகம் தந்தவர் அன்னபூரணியாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை மாணவர்கள்மீது மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், அங்கே அரசு கலைக் கல்லூரி அமைக்க முடியாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள். எனவே, அருள்கூர்ந்து, கனிவுடன் பரிசீலனை செய்து, அரசு பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினையாவது அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து, வேண்டி கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்ய முன்வருவார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—50

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, "குற்றாலத்திலேகூட தண்ணீர் வற்றிவிடலாம்" என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் உயர் கல்வித் துறைக்கென அறிவித்திருக்கின்ற அறிவிப்புகள் என்பது, "வற்றாத ஜீவ நதிகளை" போன்றவை. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த நான்கு ஆண்டுகளில், மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள ஏழை, எளிய மாணவர்கள் அனைவரும் உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு பல்வேறு கல்வி நிலையங்களைத்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 28]

தொடங்கியிருக்கின்றார்கள். இன்றைக்குத் தமிழ்நாடு இந்தியாவிலே முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவரது தொகுதியில் இருக்கக்கூடிய காடாம்புலியூரிலே ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். அதற்குத் தேவையான 10 ஏக்கர் நிலம் அங்கு இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலத்தைப் பொறுத்தவரையில், அது எந்த வகையான நிலம் என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே அரசுக் கல்லூரி ஆரம்பிக்கவில்லையென்றாலும்கூட, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி ஆரம்பித்தால் போதும் என்றும் ஒரு கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்த மாவட்டம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தினுடைய எல்லைக்குள் வருகிற மாவட்டமாக இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, எதிர்காலத்திலே நிதிநிலைக்கேற்ப பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியை ஆரம்பிப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரி இல்லையென்றாலும், பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியையாவது தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அந்தப் பகுதிக்கு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினை அமைத்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பலவகைத்*

தொழில்நுட்பக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நான் அப்படி தவறாகச் சொல்லியிருந்தால், அதனைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே தமிழகத்தில் 30 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் மட்டும்தான் செயல்பட்டுக் கொண்டிருந்தன. அதிகமான மாணவர்கள் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியில் பயில வேண்டுமென்ற நோக்கத்தில், மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் மேலும் கூடுதலாக 11 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளைத் தந்து, பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கையை 41 ஆக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்புகூட மாண்புமிகு அம்மா அவர்கள் இன்னும் கூடுதலான மாணவர்கள் தொழிற்கல்வியைப் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு, தமிழகத்தில் மேலும் 5 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற்பொழுது, அரசின் சார்பாக 46 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காடாம்புலியூரில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவிப்பிற்கிணங்க, அது செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 362, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

362—

பேருந்து வசதி

***56613 திரு. மு. திராவிடமணி:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—